بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/03/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## அருளுக்குரிய ரமலான் நிறைவடைந்ததையொட்டி ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அறிவாழம் மிக்க வழிகாட்டல்களின் ஒளியில் ஜமாஅத் மக்களுக்குப் பொன்னான அறிவுரைகள்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِكِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤

اِیَّاكَ نَعۡبُدُ وَ اِیَّاكَ نَسۡتَعِیۡنُ ۝٥ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

அல்லாஹ் நமக்கு இந்த ரமலானைக் கழிப்பதற்கான நல்வாய்ப்பு வழங்கினான். அல்லாஹ் நம்மில் பலருக்கு இறைவணக்கங்கள் செய்வதற்கும் நோன்பு வைப்பதற்கும் நல்வாய்ப்பு வழங்கி நம் மீது பேரருள் புரிந்துள்ளான். ஆனால், அத்துடன், ரமலானின் நோன்புகளை வைத்ததனாலும், இபாதத்கள் செய்ததனாலும் மட்டும் நம் நோக்கம் நிறைவேறிவிடவில்லை; மாறாக, அல்லாஹ் நமக்கு, ‘நீங்கள் நிரந்தரமாக என்னை வணங்கும் அடியார்களாக ஆக வேண்டும்’ என்று வழிகாட்டல் வழங்கி இருக்கின்றான் என்ற விஷயத்தின் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும். எனவே, இந்த நாள்களில் இறைவணக்கங்கள் செய்வதற்கு நல்வாய்ப்பு கிடைத்தவர்கள் இப்பொழுது இந்த நன்மைகளைத் தொடர்வது அவர்களின் கடமையாகும். அதற்காக துஆவும் செய்ய வேண்டும். முயற்சியும் செய்ய வேண்டும்.

எப்படி ரமலான் முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதேபோன்று ஒவ்வொரு தொழுகையும், ஒவ்வொரு ஜுமுஆவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ரமலானின் கடைசி ஜுமுஆ என்றால், அது அருளுக்குரியது என்பதல்ல. இல்லை! ஒவ்வொரு ஜுமுஆவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் அருளுக்குரியதும் ஆகும். அல்லாஹ் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். நமக்கு அன்னாரை ஏற்றுக்கொள்வதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் நமக்கு, ‘எவ்வாறு நாம் உண்மையான முஸ்லிமாகவும், மாநபி (ஸல்) அவர்களின் உம்மத்தின் நபராகவும் ஆக முடியும்?’ எனப் புரிய வைத்தார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு தருணத்தில் கூறுகிறார்கள்: நீங்கள் என்னிடம் செய்துள்ள இந்த பைஅத்தை மட்டுமே முழுமையாக நம்பியிருந்து விடாதீர்கள் என்றும், நீங்கள் அதன் உண்மைத்துவத்தை சென்றடையாத வரை ஈடேற்றம் கிடைக்காது என்றும் நான் எனது ஜமாஅத்துக்குப் பலமுறை கூறியிருக்கிறேன்... சீடர் சுயமே செயல்படக்கூடியவர் இல்லையென்றால், பீருடைய சான்றோர் தன்மை அவருக்கு எந்தப் பயனையும் அளிப்பதில்லை...

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் கிஷ்தீ நூஹ் (நூஹ் நபிய்யின் கப்பல்) என்ற ஒரு நூலை எழுதி இருக்கிறேன். அந்த நூலை மீண்டும் மீண்டும் படியுங்கள்... அல்லாஹ்வோ தூய்மை ஆனவர் வெற்றி பெற்று விட்டார் என்று கூறுகிறான். நீங்கள் இதன்படி செயல்படும்போதுதான் உங்களுக்குப் பலன் கிடைக்கும்... ஆயிரக்கணக்கான திருடர்கள், விபச்சாரிகள், நடத்தை தவறியவர்கள், மது அருந்துபவர்கள், தீய வாழ்க்கை வாழ்பவர்கள் தாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் என்று வாதம் புரிகிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் அப்படித்தானா? அவர்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தீகள் என்று அழைக்கப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்களா? ஒருபோதும் இல்லை! மாநபி (ஸல்) அவர்களின் போதனைகள்படி முழுமையாக செயல்படுவர்தான் உம்மத்தீ ஆவார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த ஜமாஅத்தில் இணைந்திருக்கிறீர்கள் என்றால், இதன் போதனைகள்படி செயல்படுங்கள். ஜமாஅத்தில் இணைந்தபின் இன்னல்களும் ஏற்படுகின்றன. இன்னல்கள் ஏற்படவில்லை எனில், பிறகு எப்படி நற்கூலி சாத்தியமாக முடியும்? இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவில் 13 ஆண்டுகள் வரை துன்பங்களை சகித்துக் கொண்டார்கள். அந்தக் காலத்து இன்னல்கள் என்னவாக இருந்தன என்பது உங்களுக்குத் தெரியவே தெரியாது. எனவே, எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்! துன்பங்கள் வரத்தான் செய்கின்றன. ஆனால், இந்த இன்னல்கள் மாநபி (ஸல்) அவர்களுக்கும், சஹாபா பெருமக்களுக்கும் வந்தபோதும், பெருமானார் (ஸல்) அவர்கள் பொறுமை காக்குமாறு போதனை வழங்கினார்கள். அதற்கு என்ன விளைவு ஏற்பட்டது? அதற்கு என்ன விளைவு ஏற்பட்டதென்றால், கடைசியில் எதிரி அழிந்து போய்விட்டான்.

நீங்கள் பார்ப்பீர்கள்! இந்தத் தீய மக்கள் அந்தக் காலத்தில் தென்பட மாட்டார்கள்... அல்லாஹ் இந்த ஜமாஅத்தை உலகத்தில் பரப்ப நினைத்து விட்டான். இந்த மக்கள் உங்களைக் குறைவானவர்களாகக் கண்டு துன்பமிழைக்கிறார்கள். ஆனால், ஜமாஅத் அதிகரித்து விடும்பொழுது இவர்கள் தாமாகவே அமைதியாகி விடுவார்கள். இதுதான் உலகத்தில் விதியாக இருந்து வந்துள்ளது. இதைத்தான் நாம் நபிமார்களின் ஜமாஅத்தின் வரலாறாகப் பார்த்துள்ளோம். அன்னார் கூறினார்கள்: பொறுமையும் ஓர் இபாதத் ஆகும்... நமது ஜமாஅத் இறையாதரவின் கீழ் இருக்கிறது. துன்பத்தை மேற்கொள்வதால் ஈமான் வலுப்பெற்று விடுகின்றது. பொறுமையைப் போன்றது எதுவும் இல்லை.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இறையச்சத்தைப் பற்றி அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: துவக்கத்தில் உண்மையான முஸ்லிமாக இருப்பவர் பொறுமை காக்க வேண்டி வருகிறது என்பதை வரலாறு கூறுகிறது. சஹாபா பெருமக்களுக்கும் இதே போன்ற காலம் வந்தது... மனிதன் இறையச்சத்தை மேற்கொள்ளும்பொழுது, அல்லாஹ் அவருக்காக கதவுகளைத் திறந்து விடுகின்றான்.

பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் அடியார்களுக்கான உரிமை தொடர்பாக கூறுகிறார்கள்: ஒருவர் மற்றவருடன் சேர்ந்து அமர்ந்திடுங்கள். எந்த அளவு நீங்கள் ஒருவர் மற்றவரை நேசிப்பீர்களோ அந்த அளவே அல்லாஹ் உங்களை நேசிப்பான். ஓரிடத்தில் அன்னார் அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: எல்லா இடத்திலும் வழிகேடு, கவனக்குறைவு மற்றும் வழிதவறுதல் எனும் காற்று வீசிக் கொண்டிருக்கின்ற இந்த அமளி நிறைந்த காலகட்டத்தில், நமது ஜமாஅத் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இன்றைய காலத்தில் வழிகேட்டின் பக்கம் அழைத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்படாத எந்த வழிமுறைதான் இருக்கிறது! இப்படிப்பட்ட காலகட்டத்தில் இந்தக் குற்றங்களின் வழிகளில் இருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்வது நமது கடமையாகும். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இறையச்சம் என்பது நாவால் மட்டும் கிடைத்து விடக்கூடியதல்ல. மாறாக, ஷைத்தான் வழிகெடுக்கின்றான். இறையச்சம் மேற்கொள்பவர்களுக்கும் இது தெரிகிறது. இதன்மூலமாகவே மனிதனது பலவீனம் பற்றி தெரியவருகின்றது... ஆக, இறையச்சத்தின்படி நடப்பவர்கள் மிகவும் ஊதி ஊதி அடியெடுத்து வைக்க வேண்டியிருக்கிறது. எல்லா ஆற்றல்களின் தலையூற்று இறைவன்தான் என்பதில் மனிதனுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்படும்போதுதான் இது நிகழ முடியும்.

அன்னார் கூறினார்கள்: பெரிய விஷயங்களான விபச்சாரம், திருட்டு, உரிமைகளை செலுத்தாமல் இருத்தல், வெளிக்காட்டுதல், ஆணவம், ஏளனமாகக் கருதுதல், கருமித்தனம் ஆகியவற்றை விடுவதில் உறுதியாக இருக்க வேண்டும். தீயொழுக்கங்களை விட்டுத் தவிர்ந்திருந்து, அவற்றிற்கு நிகராக நல்லொழுக்கங்களில் முன்னேற வேண்டும். இதுவே இறைச்சமுடையவர் ஆவதற்கு அவசியமானதாகும். தீமைகளை விட்டுத் தவிர்ந்திருப்பது மட்டும் போதாது; மாறாக, இதற்கு நிகராக நல்லொழுக்கங்கள் உருவாக வேண்டும். பிறகுதான் உண்மையான இறையச்சம் ஆகும். நன்மைகளில் முன்னேறுவதற்கு அவசியமான வேறு விஷயங்களில் மக்களுடன் பரிவுடன் பழகுவது, நல்ல மனநிலையைக் காட்டுவது, அனுதாபம் காட்டுவது, இறைவனுடன் உண்மையான நன்றியுணர்வு மற்றும் நன்றியைக் காட்டுவது முதலிய விஷயங்களால் மனிதன் இறையச்சம் உடையவன் என்று அழைக்கப்படுகிறான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இத்தகைய மக்களுக்கு இறைவன் தானே பாதுகாவலன் ஆகி விடுகின்றான். ஏனென்றால், அல்லாஹ்வே لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ என்று கூறுகின்றான். அதாவது, அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்காது. அவர்கள் துயரம் அடையவும் மாட்டார்கள். இன்னொரு இடத்தில் وَهُوَ يَتَوَلَّى الصّٰلِحِيْنَ என்று கூறுகின்றான். அதாவது, மேலும், அவன் நற்செயல் ஆற்றுபவர்களுக்கே ஆதரவாளனாக ஆகின்றான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:* உங்களுடைய உள்ளங்களில் இறைவன் மீதான நேசம் மற்றும் மகத்துவத்தைத் தொடரச் செய்யுங்கள். இதற்காக தொழுகையை விடப் பெரியது வேறு எதுவும் இல்லை. அல்லாஹ்வுக்கு முன் உங்கள் நன்மைகளை எடுத்து வைப்பதும், அவனுக்கான உரிமையை செலுத்துவதுமே அசல் விஷயமாகும்... அதற்காக எல்லாவற்றையும் விட உயர்ந்த விஷயம் தொழுகை ஆகும்.

அன்னார் கூறினார்கள்: நாம் ரமலானைக் கடந்து வந்துள்ளோம். தொழுகைகளின் நிலையில் கடந்து வந்துள்ளோம். நன்மைகளின் நிலையில் கடந்து வந்துள்ளோம். அவற்றை ரமலானுக்குப் பிறகு தொடர்வது அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்கு அவசியமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நோன்புகளோ ஓர் ஆண்டுக்குப் பிறகு வருகின்றன. ஸகாத் செல்வந்தர் கொடுக்க வேண்டி வருகின்றது. அதுவும் ஒரு நன்மை தான். ஆனால், தொழுகையை ஒவ்வொரு தரத்தில் உள்ள நபரும் ஐவேளை நிறைவேற்ற வேண்டி வருகிறது. அதை ஒருபோதும் வீணடித்து விடாதீர்கள். அதை மீண்டும் மீண்டும் தொழுதிடுங்கள். நான் எத்தகைய ஆற்றல் படைத்தவனுக்கு முன்னால் நிற்கின்றேன் என்றால், அவன் நாடினால் இப்பொழுது ஏற்றுக் கொள்வான் என்ற எண்ணத்துடன் தொழுதிடுங்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: நமது ஜமாஅத்திற்குத் தேவையான விஷயமாவது, அவர்களுடைய ஈமான் அதிகரிக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது உண்மையான, உறுதியான நம்பிக்கையும், இறைஞானமும் உருவாக வேண்டும். நற்செயல்களில் சலிப்பும், சோம்பேறித்தனமும் இருக்கக் கூடாது. ஏனென்றால், சோம்பேறித்தனம் இருந்தால், பிறகு, ஒருவர் தஹஜ்ஜுத் தொழுவது என்ன, உளூ செய்வதும் ஓர் இன்னலாகத் தென்படுகிறது. நற்செயல்களுக்கான ஆற்றல் உருவாகவில்லை என்றால், நன்மையில் ஒருவரை ஒருவர் முந்திச் செல்வதற்கான உத்வேகம் இல்லையென்றால், பிறகு, நம்முடன் தொடர்பை ஏற்படுத்துவது பலனற்றதாகும்.

அன்னார் கூறினார்கள்: நம்முடைய போதனைகளைத் தனது செயல் வழக்கமாக ஆக்கிக் கொள்பவர், தனது துணிவு மற்றும் முயற்சிக்கு ஏற்ப அதன்படி செயல்படுபவர்தான் நமது ஜமாஅத்தில் நுழைகிறார். மேலும், எவர் பெயர் மட்டும் வைத்துக் கொண்டு போதனைகள்படி செயல்படுவதில்லையோ அவர் நினைவில் கொள்ளட்டும்! இறைவன் இந்த ஜமாஅத்தை ஒரு சிறப்பான ஜமாஅத்தாக ஆக்க வேண்டும் எனத் தீர்மானித்துள்ளான். எந்த நபரும் பெயர் எழுத வைப்பதனால் மட்டும் ஜமாஅத்தில் இருக்க முடியாது. எனவே, இயன்ற அளவு உங்களுக்கு வழங்கப்படும் போதனைக்கு ஏற்ப உங்களுடைய அமல்களை ஆக்கிக் கொள்ளுங்கள். அன்னார் கூறினார்கள்: நற்செயல்கள் இறக்கைகளைப் போன்றவை ஆகும். நற்செயல்கள் இல்லாமல், மனிதன் ஆன்மிகப் படித்தரங்களுக்காகப் பறக்க முடியாது. இறைவன் மீது நேசம் கொள்வதன் பொருள் என்ன? ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உங்கள் பெற்றோர், உங்கள் மனைவி, உங்கள் பிள்ளைகள் மற்றும் உங்கள் ஆன்மா

ஆகிய அனைத்தின் மீதும் அல்லாஹ்வின் திருப்தியை முதன்மையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இதனால்தான் அல்லாஹ் திருக்குர்ஆனில் فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا என்று கூறுகின்றான். அதாவது, நீங்கள் உங்கள் தந்தைமார்களை நினைவு கூர்வது போன்று அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அதற்கும் மேலாக, அதைவிடவும் அதிகமாகவும் கடுமையான தரத்தின் நேசத்துடனும் நினைவு கூருங்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்த ரமலானில் நாம் உயர் நல்லொழுக்கங்கள் மற்றும் இபாதத்கள் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்தினோம் எனும்போது, இப்பொழுது இந்த கவனம் ஆண்டு முழுவதும் தொடர வேண்டும். இந்த முயற்சி ரமலானுடன் முடிந்து விடக்கூடாது. மாறாக, ஆண்டு முழுவதும் தொடர வேண்டும். இந்த முயற்சி ஆண்டு முழுவதும் இருக்கும்போதுதான் நமது வாழ்வின் உண்மையான நோக்கமான அந்த நோக்கத்தைப் பெறக்கூடியவர்களாக நாம் ஆக முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உலகவாதிகளைப் போன்று இருப்பீர்களாயின், அதனால் எந்தப் பலனும் ஏற்படாது. நீங்கள் எனது கையில் தவ்பா செய்துள்ளீர்கள். எனது கையில் தவ்பா செய்வது ஒரு மரணத்தை நாடுகிறது. இதன் மூலம் நீங்கள் புதிய வாழ்வில் இன்னொரு பிறப்பைப் பெறக்கூடும். பைஅத் உள்ளத்தால் இல்லையென்றால், அதற்கு எந்த விளைவும் கிடையாது. நீங்கள் என்னிடம் பைஅத் செய்வதன் மூலம் உள்ளத்தால் ஒப்புதல் கூற வேண்டும் என்று இறைவன் நாடுகிறான்.

ஆக, எவர் உண்மையான உள்ளத்துடன் என்னை ஏற்றுக் கொள்கிறாரோ, தன்னுடைய பாவங்களிலிருந்து உண்மையான முறையில் தவ்பா செய்கிறாரோ அவருடைய பாவங்களை, அதிகமாக பாவங்களை மன்னிக்கக்கூடியவனும் மேன்மேலும் கருணை காட்டக்கூடியவனும் ஆகிய இறைவன் கண்டிப்பாக மன்னித்து விடுகின்றான். அவர் தாயின் வயிற்றில் இருந்து வந்தது போன்று ஆகி விடுகிறார். அப்பொழுது வானவர்கள் அவரைப் பாதுகாக்கின்றனர்... ஒரு கிராமத்தில் நல்ல மனிதர் ஒருவர் இருக்கிறார் என்றால், அல்லாஹ் அவரது நன்மையைக் கருத்தில் கொண்டு, அவருக்காக அந்த கிராமத்தை அழிவிலிருந்து காப்பாற்றி விடுகின்றான். ஆனால், அழிவு வரும்போது, எல்லார் மீதும் விழுகிறது. ஆனால், பிறகும் அவன் தன் அடியார்களை ஏதாவது ஒரு விதத்தில் காப்பாற்றி விடுகிறான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் கூறினார்கள்:* எனவே, இன்றைய காலத்தில் இருக்கும் உலகின் நிலைமைகளில் நாம் குறிப்பாக நம்மையும், நம் வழித்தோன்றல்களையும் உலகையும் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஓரிறைக் கொள்கையை உலகில் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மாநபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதே வேளையில், அதற்காக நாம் நம்மிடம் ஒரு சிறப்பான மாற்றத்தை நிரந்தரமாக உருவாக்க வேண்டி வரும்.

நிரந்தரமான துஆக்களை நம் வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டி வரும். அப்போதுதான் நாம் நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். உலகத்தையும் பாதுகாப்பாக வைக்க முடியும். ஏனென்றால், உலகம் மிக வேகமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அல்லாஹ் நாடினால், அவர்களுடைய உள்ளங்களைத் திருப்பி உலகின் சீர்திருத்தத்திற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும். இதனால் அந்த அழிவிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியும்.

அழிவு வரவே இருக்கிறது என்றால், பிறகு அல்லாஹ் முஃமின்களை, நம்பிக்கை கொண்டவர்களை அதிலிருந்து காப்பாற்றுவானாக! அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நாம் நம்முடைய அமல்களை இந்தக் கோணத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருள் என்றென்றும் நம்மீது இருக்கும் வகையில் நிறைவேற்ற வேண்டும். எவ்வாறு நாம் நம்முடைய இபாதத்களை உயிரோட்டத்துடன் வைத்திருப்பது, எவ்வாறு நாம் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவது, எவ்வாறு நாம் இறையச்சத்தின்படி நடப்பது, எவ்வாறு நாம் உயர் நல்லொழுக்கத்தைக் காட்டுவது, எவ்வாறு நாம் ஓரிறைக் கொள்கையை உலகில் நிலைநாட்டுவது, எவ்வாறு நாம் உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவது, எவ்வாறு நம்மை உலகின் அழிவிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றுவது ஆகிய விஷயங்களின் உண்மையான புரிதலைப் பெறக்கூடியவர்களாகவும் நாம் ஆவோமாக!

இந்த விஷயங்கள் இருக்கும்போதுதான், நம்முள் இந்த உணர்வு ஏற்படும்போதுதான், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்துக்கான உரிமையையும் செலுத்தக்கூடியவர்களாக இருப்போம். நாம் இந்த பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றக்கூடியவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக! இந்த ரமலான் நமக்கு அருள்களுக்குக் காரணமாக அமையட்டுமாக! நமக்குத் தன்னுடைய கருணைகள், அருள்கள் மற்றும் பரக்கத்துகளை வழங்குவானாக!

ரமலானின் வரக்கூடிய நம்முடைய நாள்கள், முழு ஆண்டு மற்றும் அடுத்த ரமலான் வரை நாம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றக்கூடியவர்களாக இருப்போமாக! அவனுடைய அடியார்களின் உரிமையையும் நிறைவேற்றக்கூடியவர்களாக இருப்போமாக! அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا

مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ

وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ

اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)